**ஆகஸ்ட் - 03**

# தேசியச் செய்திகள்

## AIM iCREST

- நிதி ஆயோக்கின் அடல் புத்தாக்கத் திட்டமானது (AIM - Atal Innovation Mission) AIM iCREST என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்திற்காக AIM ஆனது பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் நிறுவனம் & வத்வா நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
- இது உயர் செயல்திறன் கொண்ட புத்தாக்க நிறுவனங்களை உருவாக்குவதின் மீது கவனம் செலுத்தும் வலுவான சூழலியலுக்கான ஒரு புத்தாக்க நிறுவங்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டமாகும்.
- இது நாடு முழுவதும் புத்தாக்கச் சூழலியலில் விரிவான (முழுமையான) செயல்பாடுகளை ஏற்படுத்தி அவற்றை ஊக்கப்படுத்துவதற்காக இந்தியாவில் தொடங்கப் பட்ட இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது முன்னெடுப்பாகும்.

## முகுந்தகம் சர்மா குழு

- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டிற்கான பல்வேறு விளையாட்டுப் போட்டி விருதுகளின் வெற்றியாளர்களைத் தேர்வு செய்வதற்காக தேர்வுக் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியான முகுந்தகம் சர்மா என்பவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

# சர்வதேசச் செய்திகள்

## காமன்வெல்த் மனித உரிமைகள் முன்னெடுப்பு (CHRI)

- சமீபத்தில் ஆள்கடத்தலுக்கு எதிரான உலக தினக் கொண்டாட்டத்தின் போது அடிமைத் தனம் குறித்த ஒரு அறிக்கையானது CHRI (Commonwealth Human Rights Initiative) மற்றும் சர்வதேச அடிமைத்தன எதிர்ப்பு அமைப்பான "வாக் ப்ரீ" (Walk Free) ஆகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ளது.
- உலகில் நவீன அடிமைத்தன நிலையில் ஏறத்தாழ 40% மக்கள் காமன்வெல்த் நாடுகளில் வாழ்கின்றனர்.
- உலகில் நடைபெறும் அனைத்துப் பெண் குழந்தைத் திருமணங்களில் மூன்றில் ஒரு பங்கை இந்தியா கொண்டுள்ளது.
- CHRI என்பது மனித உரிமைகள் துறையில் பணியாற்றும் ஒரு சுயாதீன, இலாப

நோக்கற்ற மற்றும் சர்வதேச அரசு சாரா அமைப்பாகும்.

- இதன் தலைமையகம் இந்தியாவில் உள்ள புது தில்லியில் அமைந்துள்ளது.

## ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து சிலை

- 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு அரிய வகை சிவன் கடவுளின் கற்சிலையானது இந்தியத் தொல்லியல் துறைக்கு (ASI - Archaeological Survey of India) வழங்கப்பட உள்ளது.
- இது இராஜஸ்தானில் உள்ள ஒரு கோவிலிலிருந்துத் திருடப்பட்டு, ஐக்கிய இராஜ்ஜியத்திற்குக் கடத்தப்பட்டது.
- இது இராஜஸ்தானின் பரோலியில் உள்ள காட்டீஸ்வர ஆலயத்தைச் சேர்ந்ததாகும்.
- இது குர்ஜரா-பிரதிகாரா அரசர்களினால் கட்டப்பட்டதாகும். இது பிரதிகாரா பேரரசு என்றும் அழைக்கப் படுகின்றது.
- இவர்கள் 7 ஆம் நூற்றாண்டின் மத்தியில் இருந்து 11 ஆம் நூற்றாண்டு வரை வட இந்தியாவின் அதிகப்படியான பகுதிகளை ஆட்சி செய்து வந்தனர்.



## உரிமம் மீதான வரி

- அமெரிக்கத் தொழில்நுட்ப நிறுவனமான முகநூல் மற்றும் ஆல்பபெட் கூகுள் ஆகியவை செய்திப் பொருளடக்கத்திற்காக வேண்டி ஆஸ்திரேலிய ஊடக வெளியீட்டாளர்களுக்குக் கட்டணம் செலுத்த வேண்டும் என்று ஆஸ்திரேலியா எச்சரித்துள்ளது.
- இது தனது நாட்டு ஊடக நிறுவனங்களுக்கு உதவ இருக்கின்றது.
- உரிம ரீதியிலான முறையின் கீழ் உரிமத்தைப் பெறும் முதலாவது நாடு ஆஸ்திரேலியா ஆகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சுரக்சா

- அறிவியல்சார் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றமானது அமெசிஸ் இந்தியா என்ற நிறுவனத்துடன் இணைந்து "சுரக்சா" என்ற நுண்ணுயிரித் தூய்மையாக்கல் பெட்டியை மேம்படுத்தியுள்ளது.
- இந்தப் பெட்டியானது வெப்பம் மற்றும் யுவிசி ஒளியைப் பயன்படுத்தி 10-15 நிமிடத்திற்குள் ஒரு பொருளைத் தூய்மையாக்கும் திறன் கொண்டது.

## சர்வதேச வெப்பாற்றல் சோதனை உலை (ITER/ International Thermonuclear Experimental Reactor)

- சர்வதேச வெப்பாற்றல் சோதனை உலையானது தனது 1 ஆண்டு கால கூடுகை நிலைக்குள் நுழைந்துள்ளது.
- இது ஒரு மிகப்பெரிய சர்வதேச அணுக் கரு இணைவு ஆராய்ச்சி மற்றும் பொறியியல்சார் திட்டமாகும்.
- இது உலகின் மிகப்பெரிய காந்த வரையறை கொண்ட பிளாஸ்மா இயற்பியல் சோதனையாக இருக்கும்.
- இது ஒரு சோதனை ரீதியிலான டோகாமாக் (tokamak) என்ற ஒரு அணுக்கரு இணைவு உலையாகும். இது தெற்கு பிரான்சில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- இது அமைதிப் பயன்பாடுகளுக்காக வேண்டி அணுக்கரு இணைவின் அறிவியல்சார் மற்றும் தொழில்நுட்பச் செயலாக்க முறையை மேற்கொள்ள இருக்கின்றது.
- இது தூய்மையான, குறைந்த செலவு கொண்ட மற்றும் அதிக அளவிலான ஆற்றலை உற்பத்தி செய்யும் முதலாவது இணைவு சாதனமாக இருக்கும்.
- இந்தத் திட்டமானது ஐரோப்பிய ஒன்றியம், சீனா, இந்தியா, ஜப்பான், ரஷ்யா, தென் கொரியா மற்றும் அமெரிக்கா ஆகிய 7 உறுப்பு நாடுகளில் நிதியளிக்கப்பட்டு நிர்வகிக்கப் படுகின்றது.
- அணுக்கரு இணைவானது சூரியன் மற்றும் நட்சத்திரங்களின் ஆற்றல் மூலமாக விளங்குகின்றது.

## ஆதித்யா படகு

- இது முதலாவது "கெசியஸ்" (Gussies) மின்சாரப் படகு விருதினை வென்றுள்ளது.




- இது படகு மற்றும் படகோட்டுதலில் சிறப்புமிகு கஸ்டேவ் ட்ரோவ் விருது என்று அதிகாரப் பூர்வமாக அழைக்கப்படுகின்றது.
- இது சூரிய ஒளி ஆற்றலால் இயங்கும் இந்தியாவின் முதலாவது மற்றும் மிகப்பெரிய படகாகும்.
- இது கேரள மாநில நீர்ப்போக்குவரத்துத் துறையின் கீழ் செயல்படுகின்றது.

### AJO - Neo

- இந்திய அரசின் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் கொல்கத்தாவில் உள்ள சத்தியேந்திரநாத் போஸ் தேசிய அடிப்படை அறிவியல் மையமானது "AJO - NRO" என்ற பெயர் கொண்ட ஒரு சாதனத்தை மேம்படுத்தியுள்ளது.
- இது புதிதாகப் பிறந்த குழந்தைகளில் (பச்சிளம் குழந்தை) "தொடுதல் அற்ற மற்றும் வலியற்ற" ஊடுருவல் அல்லாத பிலிரூபின் நிலை சோதனையாகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## வான்வழி வழியாக விதை விதைத்தல்

- ஹரியானா மாநில வனத் துறையானது அம்மாநிலமெங்கிலும் வான்வழியாக விதை விதைத்தலை சோதனை முயற்சியாகத் தொடங்கியுள்ளது.
- இந்த நுட்பமானது செல்ல முடியாத அல்லது செல்வதற்குக் கடினமாக உள்ள ஆரவல்லி மலைப் பகுதிகளில் விதை விதைத்தலை மேற்கொள்ள அனுமதிக்கின்றது.

- இந்த நுட்பமானது மற்ற குடிமைப் பகுதிகளுடன் தொடர்பில் இல்லாத அல்லது இணைக்கப்படாதப் பகுதிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


## திருவாளர் மக்களாட்சி

- தைவானின் முன்னாள் அதிபரான திரு. லீ டெங்-குய் அவர்கள் தைவானின் தைபய் நகரில் காலமானார்.
- இவர் தைவானில் சர்வாதிகார ஆட்சியை ஒழித்ததற்காக "திருவாளர் மக்களாட்சி" என்று வெகு சிறப்பாக அறியப்படுகின்றார்.

# முக்கிய தினங்கள்

## முஸ்லீம் பெண் உரிமைகள் தினம் - ஜூலை 31

- இது உடனடி முத்தலாக்கிற்கு எதிரான சட்டத்தின் முதலாவது நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- முஸ்லீம் பெண்கள் (திருமண உரிமைகளின் பாதுகாப்பு) சட்டம், 2019 என்று முறையாக அழைக்கப்படும் இந்த சட்டம் கடந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.
- இது முஸ்லீம் ஆண்களினால் வழங்கப்படும் உடனடி விவாகரத்து நடைமுறையைத் தடுக்கின்றது.
- இந்தச் சட்டத்தை மீறுவோர்க்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப் படும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★